# மீசாலை வடக்கு - தட்டாங்குளம்
# அருள்மிகு திருநீலகண்ட பிள்ளையார் ஆலயம்



# மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்
## 23.08.2024

உ

சிவமயம்

# மீசாலை வடக்கு - தட்டாங்குளம்
# அருள்மிகு திருநீலகண்ட பிள்ளையார்
# ஆலயம்



## பஞ்சகுண்ட பக்ஷ் புனராவர்த்தன பிரதிஸ்டா
## மகா கும்பாபிஷேக
## சிறப்பு மலர்
## 23.08.2024

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முகவுரை | 1 |
| ஆசியுரை | 3 |
| வாழ்த்துச் செய்தி | 4 |
| திருப்பணி வரவு | 5 |
| திருப்பணி செலவு | 10 |
| கும்பாபிஷேக வரவு | 13 |
| கும்பாபிஷேக செலவு | 15 |
| மண்டலாபிஷேக வரவு | 17 |
| வரவு செலவுப் பொழிப்பு | 20 |
| பொருளாளர் அறிக்கை | 21 |
| நன்றியுரை | 22 |



### மீசாலை வடக்கு தட்டாங்குளம்

# திருவருள் மிகு திருநீலகண்ட பிள்ளையார் ஆலய

# பஞ்சகுண்ட பக்ஷ் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா விஞ்ஞாபனம் – 2024

**கர்மாரம்பம்**
20.08.2024, செவ்வாய்கிழமை
அதிகாலை 05.25 மணி

திருச்சிற்றம்பலம்
வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழ
பான்மைதரு செய்ய தமிழ் பார் மிசைவிளங்க
ஞானமத ஐந்துகர மூன்று விழி நால்வாய்
ஆனை முகனை பரவி அஞ்சலி செய்விற்பாம்.

**மஹா கும்பாபிஷேகம்**
23.08.2024, வெள்ளிக்கிழமை
காலை 07.59 மணி – 09.39 வரை

**எண்ணைக் காப்பு**
22.08.2024 வியாழக்கிழமைகாலை 09.30 மணி முதல் மாலை
05.30 மணி வரை பக்தர்கள்எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம் பெறும்

விநாயகப்பெருமான் அடியார்களே!

இலங்கை துவீபத்தின் சிகரமென விளங்கும் யாழ்ப்பாணம் தென்மராட்சி முக்கனிச் சோலைகளும் நிறைந்த கந்தபுராண கலாச்சாரமும் கல்விமான்களும் நிறைந்து விளங்கும் சாவகச்சேரி மீசாலை வடக்கு தட்டாங்குளம் என்னும் திவ்விய திருத்தலத்தில் வீற்றிருந்து செங்கோலோச்சும் திருநீலகண்ட பிள்ளையாருக்கும் ஏனைய பரிவார தேவர்களுக்கும் நிகழும் மங்கலகரமான குரோதிவருஷம் ஆவணி மாதம் 07ம் நாள் (23.08.2024) வெள்ளிக்கிழமை, சதுர்த்தி திதியும், ரேவதி நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய காலை 07.59 மணிமுதல் 9.39 மணிவரையுள்ள கன்னி லக்ன சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நிகழ திருவருள் கைகூடியுள்ளது அன்றும் அதற்கு முன்னரும் நடைபெறுகின்ற கிரியைகளில் பங்குபற்றி இறைவனை தரிசித்து திருவருள் பெற்று வாழ்வாங்கு வாழ்வீர்களாக.

## கிரியைகால விபரங்கள்

ஆவணிமாதம் 04ம் நாள் 20.08.2024 செவ்வாய்க்கிழமை அதிகாலை 05.25 மணிமுதல் மஹாகும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பம், கர்மாரம்பம் ஸ்ரீ விநாயகர் வழிபாடு . அனுஞ்ஞை, திரவிய சுத்தி, திரவிய விபாகம், தனபூஜை, தனாகர்ஷண லஷ்சுமி ஹோமம், ஸ்ரீகணபதி ஹோமம், நவக்கிரகமகம், யந்திரபூஜை, கோவாசம், மூர்த்தி ஹோமம், சாந்தி ஹோமம், திசா ஹோமம், மாலை 04.00 மணி முதல் ஸ்ரீவிநாயக வழிபாடு, பேரீதாடனம், கிராமசாந்தி, பிரவேசபலி, வாஸ்த்துசாந்தி

ஆவணி மாதம் 05ம் நாள் 21.08.2024 புதன்கிழமை அதிகாலை 04.30 மணிமுதல் ஸ்ரீ விநாயகவழிபாடு 05.00 மணிமுதல் ஸ்தூபி ஸ்தாபன - தீபஸ்தானம், கும்பஸ்தாபனம், 09.00 மணிமுதல் ஸ்ரீ விநாயகவழிபாடு, யந்திர பூஜை, கங்கா பூஜை, சூரிய அக்னி சங்கிரகணம், மாலை 03.00 மணி முதல் மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம் சிவாச்சாரியார் இரட்சாபந்தனம், கும்பஸ்தாபனம், கலாகர்ஷணம், ஷணயாத்திராஹோமம், யாகபூஜை, அக்னி உத்பவம், கும்ப யாக சாலாப் பிரவேசம், மூர்த்தி ஆவாகனம், ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, பஞ்சமுகார்சனை, வேததோத்திர திருமுறை பாராயணம்.

ஆவணி மாதம் 06ஆம் நாள் 22.08.2024 வியாழக்கிழமை அதிகாலை ஸ்ரீ விநாயக வழிபாடு 5.00 மணி முதல் யந்திர பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம் காலை 8.00 மணி முதல் விஷேட சந்தி, யாக பூஜை, குண்ட பூஜை, ஹோமம், விஷேட திரவிய ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, பஞ்சமுக அர்ச்சனை, வேத தோத்திர திருமுறை பாராயணம்

காலை 09.30 மணி முதல் மாலை 05.30 மணிவரைக்கும் அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல்.
மாலை 04.00 மணி முதல் ஸ்ரீ விநாயகவழிபாடு விஷேட சந்தி, பூதசுத்தி, யாகபூஜை, குண்ட பூஜை, ஹோமம், ஸ்பர்சாகுதி, தீபாராதனை, வேத தோத்திர திருமுறை, பாராயணம்

ஆவணி மாதம் 07ம் நாள் 23.08.2024 வெள்ளிக்கிழமை அதிகாலை 05.30 மணிமுதல் ஸ்ரீ விநாயக வழிபாடு, யாகபூஜை, ஹோமம், மஹாபூர்ணாகுதி, விஷேட தீபாராதனை, ஹோம ஜப சமர்ப்பணம் வேத தோத்திர திருமுறை பாராயணம், அந்தர் பலி, பஹிர்பலி, யாத்திரா தானங்கள், 07.59 மணிமுதல் ஸ்தூபி அபிஷேகம் பிரதான கும்பம் திரு வீதிஉலா, புஷ்பாஞ்சலி, மூலாலய பிரவேசம், ஆவாகனம் கன்னி லக்ன சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம், மஹாஹவிர் நிவேதனம், தசதர்சனம், ஸ்திராகுதி, எஜமான் அபிஷேகம், மங்கல ஆசீர்வாதம், மஹா அபிஷேகம், விஷேட பூஜை மாலை 05.00 மணிமுதல் விஷேட பூஜை, வசந்த மண்டப பூஜை உற்சவம்

## கும்பாபிஷேக குருமார் விபரம்

**கும்பாபிஷேகம் சிறப்புற விண்ணில் இருந்து ஆசி வழுங்குபவர்கள்**
சிவாகம கிரியாதிலகம், ஜோதிட பூஷணம், சமஸ்கிருதபண்டிதர்
ஸ்வர்க்கிய ஸ்ரீ. து. கல்யாண சுந்தரக் குருக்கள் - மீசாலை
ஜோதிடர். சமஸ்கிருத பண்டிதர், ஆசிரியர்
ஸ்வர்க்கிய ஸ்ரீ . து. சு. பாலசுப்ரமணிய ஐயர் (கேரளா)

**பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியார்**
"சிவாகம ஞான திவாகரன்" "வேதாகம வித்வத்ஜோதி"
"சுப்பிரம்மண்ய பிரதிஷ்டா ரத்னம்"
பிரம்மஸ்ரீ. சுந்தர பால முரளீதரக் குருக்கள்
"குகநேய கிரியாச்செல்வர், "சிவாகம ரட்ணாகரம்"
ப்ரம்மஸ்ரீ. முரளீதர - ரமானந்தக் குருக்கள்
(இலந்தைக் கூடல் வீரகத்திப் பிள்ளையார் கோயில் )

**கும்பாபிஷேகம் சிறப்புற அருளாசி வழுங்கும் விப்ர சிரேஷ்டர்கள்**
வேதாகம ஞான பாஸ்கரன்
தரம சாஸ்த்தா குருகுல அதிபர்
வேத - ஆகம வைதீக வாத்தியார்
ப்ரம்மஸ்ரீ. தா. மகாதேவ குருக்கள்
வேதாகம திலகம்
ப்ரம்மஸ்ரீ நா.நாராயணக் குருக்கள்
மாவிட்டபுரம்

**சர்வபோதகம்**
சிவாகம திலகம் வாகீசவாரதி - ப்ரம்மஸ்ரீ கணேச சபாபதிக் குருக்கள்
சுன்னாகம்

**வேத பாராயணம்**
குகநேய சாதகச் செல்வர்
ப்ரம்மஸ்ரீ. வெ. கஜராஜசர்மா
வட்டுக்கோட்டை

**யாகமூர்த்திப சிவாச்சாரியார்கள்**
" சிவாகம வாஸப்பதி "
ப்ரம்மஸ்ரீ. க. கனகரூப குருக்கள் - (கொக்குவில்)
" கிரியா பூஷணம் "
ப்ரம்மஸ்ரீ. சோ. கிரிதரக்குருக்கள் (கொழும்பு)
" சிவாகம வாசப்ஸ்பதி "
ப்ரம்மஸ்ரீ. சிவோத்தம யதுகரக் குருக்கள் (ஏழாலை)
" கிரியா சிரேஸ்டர் "
ப்ரம்மஸ்ரீ. தேவபிரசன்னாக்குருக்கள் (சங்கத்தானை)
" வித்யா சாகித்திய ஷங்கர் "
ப்ரம்மஸ்ரீ. இரா. கிருஷ்ணராமக் குருக்கள் (சரசாலை)
" ஈசான சிவாச்சாரியார் "
ப்ரம்மஸ்ரீ சுந்தர. கோகிலக் குருக்கள்
(சங்கத்தானை)

**ஆலய நித்திய பூசகர்**
ப்ரம்மஸ்ரீ. பா.ஹரிப்பிரசாந்த் சர்மா
கிராம்புவில் சாவச்சேரி

**யாக சம்ரஷ்கரர்கள்**
ப்ரம்மஸ்ரீ.ஸ்ரீகர சர்மா - மயிலணி
ப்ரம்மஸ்ரீ. ஜீவக சர்மா - பறாளை
ப்ரம்மஸ்ரீ. ஹரிசன் சர்மா - மட்டுவில்
ப்ரம்மஸ்ரீ.யாதவசர்மா - உரும்பிராய்
ப்ரம்மஸ்ரீ ஐங்கர சர்மா - அரியாலை

**சர்வ சாதகாச்சாரியார்**
ப்ரம்மஸ்ரீ. ப. சனாதனசர்மா
BBA (Spl) LLB

| கூரை வேலை மரவேலைகள் | ஒலி, ஒளி | நிலவேலை | யாக குண்ட அமைப்பு, சோடனைவேலை | வர்ண வேலை | மங்கல வாத்தியம் |
|---|---|---|---|---|---|
| சின்னத்தம்பி பாலகிருஸ்ணன் | தேவஸ்தானம் | சிங்கராசா மன்னார் | பா.நிரஞ்சன் குழுவினர் - கற்குழி சிவம் - கச்சார்வெளி | துரைசிங்கம் குழுவினர் கெருடாவில் | உருத்திரமூர்த்தி குழுவினர் சங்கத்தானை |

அடியவர்கள் குறித்த நிகழ்வுகளை தரிசித்து சிவதிரவியங்களை உபகரித்தும் தொண்டுகள் புரிந்தும் திருநீலகண்ட விநாயகரின் திருவருளைப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வாங்கு வாழ்வீர்களாக 45 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

"கணபதி பாதம் தொழ வேண்டிய செல்வம் விளைந்து வரும்"
"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"
சுபம்

இங்ஙனம்
ஆலய பரிபாலனசபையினர் / திருப்பணிச்சபையினர்
உபயகாரர்கள், தொண்டர்கள்

# திருப்பணியின் போது











# முகவுரை

இலங்கைத்துவீபத்தின் சிகரம் என விளங்கும் யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதியில் முக்கனிச் சோலைகளும் வயல் தென்னை வளங்கள் நிறைந்ததும் கந்தபுராண கலாச்சாரமும் கல்விமான்களும் நிறைந்து விளங்கும் சாவகச்சேரி மீசாலை வடக்கு தட்டாங்குளம் என்னும் திவ்விய திருத்தலத்தில் வீற்றிருந்து அருள் பாலித்துக்கொண்டிருக்கும் திருநீலகண்ட பிள்ளையாருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் மங்களகரமான குரோதி வருஷம் ஆவணி மாதம் 7ம் நாள் (23-08-2024) வெள்ளிக்கிழமை சதுர்த்தி திதியும் ரேவதி நட்சத்திரமும் கூடிய காலை 7.59 மணி முதல் 9.39 மணி வரையுள்ள கன்னி லக்கன சுபமுகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம் நிகழ திருவருள் கூடியுள்ளமை இப்பிரதேச அடியவர்களும் புலம் பெயர்ந்துள்ள எமது பிரதேச அடியவர்களும் செய்து வைத்த பெரும் பேறு என்று சொன்னால் மிகையாகாது.

ஆகவே விநாயக பெருமானின் திருவருள் சகல அடியவர்களுக்கும் கிடைக்கப்பெற வேன்டும் என்பது எமது எல்லோரது பெரு விருப்பாகும். சைவ ஆகம விதி முறைகளிலே 12 வருடத்திற்கு ஒரு முறை கும்பாபிஷேகம் நடைபெறவேன்டும் என்று சொல்லப்படுகிறது. அந்த விதிமுறைகளுக்கு அமைவாக இதற்கு முன்னர் 25.04.2012 புதன்கிழமை கும்பாபிஷேகம் நடைபெற்று, இன்று 23.08.2024 புதன் கிழமை 12 வருட காலப்பகுதியிலேயே மகா கும்பாபிஷேகம் நடை பெறுவது ஒரு சிறப்பம்சம் ஆகும்.

இதே நேரத்தில் திருப்பணிகள் பற்றி நோக்கும் போது ஆலயத்தின் உட்பிரகாரம் முழுவதற்கும் ரெறாசோ பதிக்கப்பட்டிருப்பது எல்லோரது நெஞ்சங்களிலும் பதிந்துள்ளது. இதனை நிறைவேற்றிய திரு.சிங்கராசா அவர்களுக்கு எமது பாராட்டுக்கள் அதே போல் வர்ண வேலையும் மனசு வைத்து திரு. சு.துரைசிங்கம் அவர்களால் மேற்கொள்ளப்பட்டிருப்பதும் அனைவரும் அறிந்ததே அவருக்கும் பாராட்டுக்கள் இது தவிர திரு.பா.நிரஞ்சன் குழுவினரும் ஏற்ற பிரகாரம் தமது வேலைகளை சிறப்பாக நிறைவேற்றியமையும் குறிப்பிடதக்கது. கூரை வேலைகள் மற்றும் மரவேலைகளையும் எங்கள் எண்ணத்திற்கு ஏற்றமுறையில் பாலகிருஸ்ணன் அவர்கள் ஒப்பேற்றியுள்ளனர். இதே போல திருமுருகதாஸ் அவர்களும், சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குரிய வேலைகளை, திறம்பட செய்துள்ளதன் காரணமாக கும்பாபிஷேகம் சிறப்பாக நடை பெற்றது.

விஷேடமாக எமது கும்பாபிஷேக பிரதம குருக்கள் சுப்பிரமணிய பிரதிஸ்டாரத்தினம் பிரம்ம ஸ்ரீ சுந்தர பால முரளிதர குருக்கள் அவர்களது தலைமையில் அவரது நெறியாள்கையும் ஏனைய அந்தணப் பெருமக்களது சிறப்பான செயற்பாடுகளும், கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக அமைவதற்கு வழிவகுத்தது என்றால் அது மிகையாகாது, என்பதற்குப் பதிலாக பிள்ளையாரின் திருவருள் என்றுதான் கூறவேண்டியுள்ளது.

திருப்பணிகளை எவ்வாறு செய்ய வேண்டும் என்ற மனம் இருந்தாலும் அதற்கான திருப்பணி நிதியை வழங்கி உதவிய உள்ளூரிலும் வெளியூரிலும் இருந்தும் ஈடுபாடுகொண்ட அனைவருக்கும் விநாயக பெருமானின் திருவருள்கடாட்ஷம் கிடைக்கும் என்பதில் எது வித சந்தேகமும் இல்லை.

இதே போல் இலை மறை காயாக இருந்து கும்பாபிஷேம் சிறப்பாக நடைபெற உதவி செய்த அனைத்து உள்ளங்களுக்கும் இறைவன் திருவருள் கிடைக்க வேண்டும்.

தற்போது பதவியில் உள்ள ஆலய பரிபாலன சபையினரதும் திருப்பணி சபையினரதும் அடியவர்களினதும் பெரும் முயற்சியால் ஆலயத்தின் உட்பிரகாரம் வெளி பிரகாரம் எவ்வாறு அமைய வேண்டுமோ அவ்வாறு செய்து முடிக்கப்பட்டுள்ளது. எதிர் வரும் 12 ஆண்டுகளுக்கு இவ் ஆலயத்தின் பராமரிப்பை சரிவர மேற்கொள்வது தான் எங்கள் எல்லோரதும் கடமையாகும்.

ஏதிர்கால திட்டமிடுதலில் எமது ஆலயத்திற்கு ஒரு இராச கோபுரமும் அமைத்துக் கொண்டால் வேறு ஒன்றும் தேவை இல்லை என்பது எல்லோரது சிந்தனையிலும் உதிக்கின்ற ஒரு விடயமாகும். அதற்காக எமது பிரதேசத்தை சேர்ந்த புலம் பெயர்ந்த அன்பர்கள் சிலர் இதனை உணர்ந்து ஆரம்ப முயற்சிகளை செய்திருப்பது பெருமைக்குரியது. இதற்காக எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் கூறிவைக்க விரும்புகின்றேன்.

மேலும் இந்தக் கும்பாபிஷேகமலரின் ஊடாக எமது கணக்கறிக்கைகளும் திருப்பணி கும்பாபிஷேகம் மண்டலாபிஷேகம் என்ற விடயங்களை உள்ளடக்கி இதில் சேர்க்கப்பட்டுள்ளது என்பதையும் தயவுடன் அறியத் தருகின்றோம் இந்த மலரானது எமது ஆலயத்தின் ஒரு ஆவணச்சான்றாக அமையும் வகையில் கடந்தகால நிகழ்கால புகைப்படங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த வேளையில் எனக்கு ஒத்தாசையாக இருந்த அனைத்து உள்ளங்களுக்கும் எனது தனிப்பட்ட வகையிலான நன்றிகளை தெரிவித்துக்கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

**நன்றி**

**''இறைபணியே இன்பப்பணி''**
**''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க''**

**ந. பாலசந்திரன்**
**தலைவர்**
**ஆலய பரிபாலன சபை.**

# இலந்தைக்கூடல் வீரகத்தி பிள்ளையார் கோயில்
# ELANTHAIKODAL VEERAKATHI PILLAYAR KOVIL
# ඉලන්දයික්කූඩල් වීරකත්ති පිල්ලයාර් කෝවිල

அறங்காவலர்: பாலமுரளிதரக்குருக்கள்
பதிவு இல.:- HA/5/JA/1022
தொ.பே. -

கேணியடி வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை.

Keniyadi, Veethi,
Meesalai West,
Meesalai.


---

**திருச்சிற்றம்பலம்**

பிடியத னுருவுமை கொள மிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

## ஆசியுரை

தென்மராட்சி சாவகச்சேரி மீசாலை வடக்கு தட்டாங்குளம் என்னும் திவ்விய திருத்தலத்தில் கொலுவிருந்து அருளாட்சி புரிந்து அடியார்கள் வேண்டுவதை ஈர்த்து ரக்ஷித்து திருவருள் சொரியும். திருநீலகண்ட விநாயகப்பெருமானுடைய மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா குரோதி வருஷம் ஆவணி மாதம் 7ம் நாள் (23.08.2024) வெள்ளிக்கிழமை திருவருள் துணையுடன் சிறப்பாக நிறைவு பெற்றது காண்பதற்கரிய திருக்காட்சிகள் நிறைந்து இவ்விழாவினைத் தரிசித்தவர்கள் எல்லோரும் பெரும் புண்ணிய சீலர்கள்.

கும்பாபிஷேக பெருஞ்சாந்தியை தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்றது. தினமும் ஸ்னபனபிஷேகம் விஷேட பூஜை என்பன பக்தி பூர்வமாக நடைபெற்றது. மண்டலாபிஷேக பூர்த்தி நாளாகிய (30) முப்பதாம் நாள் புரட்டாதி மாதம் (5ம் நாள்) 21.09.2024 சனிக்கிழமை பகல் (1008) சங்காபிஷேகத்துடன் நிறைவு பெற்றது.

திருநீலகண்ட விநாயகர் பெருமான் திருவருளோடு ஆலய திருப்பணிகள் மஹா கும்பாபிஷேகம் மண்டலாபிஷேகம் சிறப்பாக நிகழ பெரும் தொண்டாற்றிய ஆலய நிர்வாகத்தினர்கள் நிதியுதவி வழங்கிய அடியவர்கள் சரீர உதவி வழங்கிய தொண்டர்கள் உபயகாரர்கள், சிற்பாசாரியர்கள், பாதகாச்சரியார், சாதகாச்சரியர்கள், மூர்த்திபர்கள், உதவியாளர்கள் மங்கல இசைக்கலைஞர்கள் அனைத்து உதவியாளர்கள் திருநீலகண்ட விநாயகப் பெருமான் அடியார்கள் எல்லோருக்கும் எல்லாம் வல்ல திருநீலகண்ட விநாயகர் பெருமான் திருவருள் கிடைக்க நல்லாசிகள்.

மண்டலாபிஷேக நிறைவில் கும்பாபிஷேக மலர் வெளியிடப்படுவது மிகவும் சிறப்பாகும். வெளியீட்டுக் குழுவினர்களுக்கும் வாழ்த்துக்களை நாம் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

**சுபம்**

## வாழ்த்துச் செய்தி

நூற்று ஐம்பது வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றுப் பெருமை மிக்க மீசாலை வடக்கு தட்டான்குளம் அருள்மிகு திருநீலகண்டப்பிள்ளையார் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நிறைவு பெற்றமை இவ்வூர் மக்களுக்கும், புலம்பெயர் தேசத்தில் வாழ்கின்ற இவ்வாலய பக்தர்களுக்கும் பெரும் பேறாக அமைகின்றது.

இவ் ஆலயத்தின் பூர்வீக வரலாற்றினை முழுமையாக அறிய முடியாவிட்டாலும் 1872ம் ஆண்டுக்கு முன்பு கோவிலடி என்னும் காணியில் எழுந்தருளியிருந்த மேற்படி ஆலயமானது படிப்படியாக காலத்திற்குக் காலம் வளர்ச்சி பெற்று இன்று அழகான சுற்றுக் கொட்டகை முழுமையாக தராசோ பதிக்கப்பட்ட நிலம், பாதுகாப்பான சுற்றுமதில் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மின்சார வசதி, ஒலிபெருக்கி வசதி, எம்பெருமான் தீர்த்தம் ஆடுவதற்கு தீர்த்தக்கேணியும், இழைப்பாறு மண்டபமும் அமைந்துள்ளதோடு அழகான சித்திரத்தேர், தேர்முட்டி, அதில் எழுந்தருளி எமக்கு அருள்பாலிக்க பஞ்சமுகப்பிள்ளையார் போன்ற எல்லா வசதிகளும் கொண்ட ஓர் ஆலயமாக விளங்குவதுடன் கிருஷ்ணர் மகாலட்சுமி முருகன், வைரவர், சண்டேசுரர், பஞ்சமுகப்பிள்ளையார் ஆகிய தெய்வங்களுக்கும் சுற்றுப்புற கோவில் அமைத்து, சபை அமைத்து சிறப்பாக விளங்குகின்றமை பெருமைக்குரிய விடயமாகும். இக் கைங்கரியங்கள் நிறைவுபெற பெரும்பங்காற்றிய இப்பிரதேச மற்றும் புலம்பெயர் தேசத்தில் வதியும் விநாயகர் அடியார்கள் யாவருக்கும் விநாயகர் அருள் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

நான் அறிந்த வரையில் இவ்வாலயத்தில் 1971ம் ஆண்டு, 1998ம் ஆண்டு 2012ம் ஆண்டு 2024ம் ஆண்டு காலப்பகுதிகளில் பெரும் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றதாக அறிகின்றேன். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையாவது ஆலயங்களில் கும்பாபிஷேகம் நடைபெறவேண்டுமென்பது எமது ஐதீகம். ஏன் இவ் பன்னிரு ஆண்டுகள் என்பதற்கு பல்வேறு காரணங்களும் விளக்கங்களும் கூறப்படுகின்ற போதிலும் எமது ஆலயத்தில் இறுதியாக 25.04.2012ம் திகதி நவ(9)குண்ட பஷபுனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெற்று சரியாக பன்னிரண்டு ஆண்டுகள் நான்கு மாதத்தில் 23.08.2024ம் திகதியன்று மகா கும்பாபிஷேக பெருவிழா நடைபெற்று முடிந்தமை விநாயகப் பெருமானின் சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றது.

எது எவ்வாறாயினும் இயற்கை எழில் மிக்க அழகாக குடிகொண்டுள்ள எம் பெருமானுக்கு ஓர் இராசகோபுரம் இல்லாமையும் சப்பறத் திருவிழாவிற்கு சப்பறம் இல்லாமையும் ஆலய சுற்றாடலில் ஆலய பூசகர்கள் தங்கியிருந்து பூசை செய்வதற்கு வீட்டு வசதி இல்லாமையும் பெரும் குறையாகக் காணப்படுகின்றது. எனவே தட்டான்குளம் பிள்ளையார் அடியார்கள் மனம் வைத்தால் இக் கைங்கரியங்களும் விரைவாக சிறப்பாக அமையும் என்பது எமது பூரண நம்பிக்கையாகும். கட்டுமானப்பணிகள், திருத்தப்பணிகள், வர்ணபூச்சு வேலைகள் யாவும் சிறப்பாக அமைந்திட பலவழிகளிலும் உதவிய அடியவர்கள் யாவருக்கும் விநாயகப் பெருமான் அருள் கிடைக்க வேண்டி வணங்கி ஆசி கூறுகின்றேன்.

**கு.சிவானந்தம்**
**பரிபாலனசபை உபசெயலாளர்**

## திருப்பணி வரவு விபரம்

| ப.சீ. இல | பெயர் | முகவரி | தொகை |
|---|---|---|---|
| 901 | பாலசந்திரன் சியந்தன் | மீசாலை வடக்கு, மீசாலை. | 250,000 |
| 902 | க.சதானந்தம் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 25,000 |
| 903 | அப்பாக்குட்டி ரத்தினேஸ்வரன் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 100,000 |
| 904 | சிவசுப்ரமணியம் சதுர்சன் | மீசாலை வடக்கு, (டென்மார்க்) | 100,000 |
| 905 | ஆ.வைரவநாதன் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 25,000 |
| 906 | ஆ.கனகசபை | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 25,000 |
| 907 | ஆ.குமாரவேலு | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 25,000 |
| 908 | வீ.சந்திரலீலா | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 25,000 |
| 909 | சு.நாகபூஷணி | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 5,000 |
| 910 | Canceled | | |
| 911 | வேதகீதன் தீபா | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 5,000 |
| 912 | கிருபாலினி அமிர்தகுலசிங்கம் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 40,000 |
| 913 | அ.குலோயனன் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 5,000 |
| 914 | கா.கனகரத்தினம் | மீசாலை வடக்கு, (பிரான்ஸ்) | 100,000 |
| 915 | அன்பழகன் கவிதா | மீசாலை வடக்கு, (பிரான்ஸ்) | 15,000 |
| 916 | கனகசுந்தரம் தயாளன் | மீசாலை வடக்கு, மீசாலை. | 10,000 |
| 917 | பாலசந்திரன் தனுஜன் | மீசாலை வடக்கு, மீசாலை. | 50,000 |
| 918 | பொ.அற்புதஜெயம் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 12,000 |
| 919 | குமாரகுலம் அனுஷியா | மீசாலை வடக்கு, மீசாலை. | 10,000 |
| 920 | சிவநேசன் கோமகள் | மீசாலை வடக்கு, மீசாலை. | 42,000 |
| 921 | பத்மதேவா ராஜேஸ்வரி | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 20,000 |
| 922 | க.சுந்தரராசா | மீசாலை வடக்கு, மீசாலை. | 100,000 |
| 923 | சி.சிவகுமார் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 15,000 |
| 924 | சி.வசந்தகுமார் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 15,000 |
| 925 | சரவணமுத்து லோகேஸ்வரன் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 15,000 |
| 926 | விமலகுமார் சுகந்தா | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 30,000 |
| 927 | ந.சின்னம்மா | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 10,000 |
| 928 | ரமேஷ் ரூபி | கச்சாய் வீதி, கொடிகாமம் | 5,000 |
| 929 | இராசன் மதூஷன் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 10,000 |
| 930 | தயாபரன் லதுஜித் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 10,000 |
| 931 | சுப்பிரமணியம் உதயகுமார் | மீசாலை வடக்கு, (கனடா) | 121,000 |
| 932 | சுப்பிரமணியம் ரஜீவ்குமார் | மீசாலை வடக்கு, (கனடா) | 100,000 |

| | | | |
|---|---|---|---|
| 933 | சுப்பிரமணியம் பாலாம்பிக்கை | மீசாலை வடக்கு, (கனடா) | 50,000 |
| 934 | சண்முகரட்ணம் சந்திரமதி | மீசாலை வடக்கு, (டென்மார்க்) | 50,000 |
| 935 | வல்லிபுரம் வாரித்தம்பி குடும்பம் | மீசாலை வடக்கு, (கனடா) | 250,000 |
| 936 | அப்பாகுட்டி ரத்தினேஸ்வரன் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 100,000 |
| 937 | சுதாகரன் உதயகுமாரி | மீசாலை வடக்கு, (டென்மார்க்) | 50,000 |
| 938 | தம்பிப்பிள்ளை குணாளன் | மீசாலை வடக்கு, (கனடா) | 100,000 |
| 939 | பானுகோபன் சதுர்சனா | மீசாலை வடக்கு, மீசாலை | 50,000 |
| 940 | சிவசுப்ரமணியம் யதுசரணன் | மீசாலை வடக்கு, மீசாலை | 50,000 |
| 941 | கண்ணதாசன் கலைமகள் | மீசாலை வடக்கு, மீசாலை | 200,000 |
| 942 | பாலசந்திரன் சியந்தன் | மீசாலை வடக்கு, மீசாலை | 150,000 |
| 943 | கிருஷ்னருபன் சியாமினி | மீசாலை வடக்கு, (கனடா) | 50,000 |
| 944 | பாலசந்திரன் தரிசன் | மீசாலை வடக்கு, மீசாலை | 50,000 |
| 945 | சுதாகரன் சப்பிரியா | மீசாலை வடக்கு, (டென்மார்க்) | 10,000 |
| 946 | நல்லதம்பி புனிதராசா | மீசாலை வடக்கு, (ஜெர்மனி) | 100,000 |
| 947 | தம்பிராசா பாபு(சிமோல்) | மீசாலை வடக்கு, (டென்மார்க்) | 100,000 |
| 948 | பொ.தேவராஜா குடும்பம் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 55,000 |
| 949 | மயில்வாகனம் அன்னப்பிள்ளை | மீசாலை வடக்கு, மீசாலை | 100,000 |
| 950 | இராசதுரை உமாதேவி | மீசாலை வடக்கு, (சுவிஸ்) | 150,000 |
| 951 | விஜயகுமார் சிவசோதி | மீசாலை வடக்கு, (சுவிஸ்) | 500,000 |
| 952 | நல்லதம்பி விக்னராசா | மீசாலை வடக்கு, (ஜேர்மனி) | 104,507 |
| 953 | சிவப்பிரகாசம் பாலலக்மி | மீசாலை வடக்கு, மீசாலை | 10,000 |
| 954 | ரத்னரதி குகநாதன் | மீசாலை வடக்கு, (Australiya) | 209,000 |
| 955 | வல்லிபுரம் வாரித்தம்பி குடும்பம் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 100,000 |
| 956 | மயில்வாகனம் அன்னப்பிள்ளை குடும்பம் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 500,000 |
| 957 | ஜெயக்குமார் டனுயன் | மீசாலை வடக்கு, கொடிகாமம் (கனடா) | 25,000 |

| | | | |
|---|---|---|---|
| 958 | தயாகரன் ஷர்மிளா | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 150,000 |
| 959 | தவராசா அரிசினி | மீசாலை கிழக்கு (கனடா) | 100,000 |
| 960 | கதிர்காமர் பரமேஸ்வரி | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 100,000 |
| 961 | க.சுகுமார் குடும்பம் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 200,000 |
| 962 | சதானந்தம் ரூபவதி | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 500,000 |
| 963 | அயிலேந்திகரன் குடு | மீசாலை வடக்கு, மீசாலை | 25,000 |
| 964 | இராசரத்தினம் புவனேஸ்வரி | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 100,000 |
| 965 | சுப்பிரமணியம் நாகபூசணி | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 100,000 |
| 966 | கா.செல்வராஜா | மீசாலை வடக்கு, (டென்மார்க்) | 30,000 |
| 967 | குகாயினி சுதர்சன் | மீசாலை வடக்கு, (பிரான்ஸ்) | 100,000 |
| 968 | சி.நவமணிதேவி | மீசாலை வடக்கு, மீசாலை | 5,000 |
| 969 | சரவணமுத்து குருபரன் | மீசாலை வடக்கு, (லண்டன்) | 100,000 |
| 970 | முத்துக்குமார் புவனேஸ்வரி | கைதடி வடக்கு, பலாலி | 550,000 |
| 971 | கணபதிப்பிள்ளை சற்குணதேவி | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 50,000 |
| 972 | செ.நாகேந்திரம் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 100,000 |
| 973 | விஜயகாந்தன் தசாங்கி | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 10,000 |
| 974 | கோகுல் நிதர்சனா | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 100,000 |
| 975 | மதனகுமார் கேமா | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 300,000 |
| 976 | வேலுப்பிள்ளை அன்னலட்சுமி | மீசாலை வடக்கு, மீசாலை | 52,000 |
| 977 | இந்திரா குடும்பம் | மட்டுவில் | 5,000 |
| 978 | கிருஸ்ணராகுலன் மதுரிகா | மீசாலை கிழக்கு (பிரான்ஸ்) | 100,000 |
| 979 | சரவணமுத்து யோகராசா | மீசாலை வடக்கு, (பிரான்ஸ்) | 200,000 |
| 980 | ஜெயசீலன் தர்மிளா | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 25,000 |
| 981 | டிபனேசன் காயத்திரி | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 50,000 |
| 982 | சிவனேசன் குகதர்சினி | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 50,000 |
| 983 | கந்தசாமி மனோஜா | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 5,000 |
| 984 | செல்லத்துரை சிவானந்தம் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 5,000 |
| 985 | சின்னத்தம்பி ஜெயக்குமாரி | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 5,000 |
| 986 | மதியழகன் துசாயினி | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 25,000 |
| 987 | வல்லிபுரம் வாரித்தம்பி குடும்பம் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 100,000 |
| 988 | தவலிங்கம் தயாபதி | மீசாலை கிழக்கு, மீசாலை | 50,000 |

| | | | |
|---|---|---|---|
| 989 | ஜெகதீஸ்வரி இரவீந்திரகுமார் | மீசாலை வடக்கு | 25,000 |
| 990 | வீரசிங்கம் ஜெயந்தி | மீசாலை வடக்கு, (லண்டன்) | 100,000 |
| 991 | கனகசுந்தரம் ஜெகதீஸ்வரன் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 10,000 |
| 992 | நடராசா அன்னம்மா | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 30,000 |
| 993 | சத்யன் பத்மஜா | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 25,000 |
| 994 | செ.பொன்னுத்துரை குடும்பம் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 60,000 |
| 995 | நிசங்கன் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 1,000 |
| 996 | ச.மதியுகன் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 27,000 |
| 997 | சிமோல் சின்னபாபு | ஜேர்மனி மீசாலை வடக்கு | 200,000 |
| 998 | சிமோல் பெரியபாபு | டென்மார்க் மீசாலை வடக்கு | 100,000 |
| 999 | சிமோல் குஞ்சுத்தம்பி | நோர்வே மீசாலை வடக்கு | 200,000 |
| 1000 | புனிதராசா றூபி | ஜேர்மனி மீசாலை வடக்கு | 100,000 |
| 1 | நல்லதம்பி மகள் குலா (ஜேர்மனி) | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 50,000 |
| 2 | த.தங்கம்மா, செல்வராசா | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 129,600 |
| 3 | த.பத்மாவதி | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 2,000 |
| 4 | வே.குமாரவேலு | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 25,000 |
| 5 | தம்பிராசா குமார் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 25,000 |
| 6 | த.சிவசரணம் | தாவளை இயற்றாலை | 25,000 |
| 7 | க.சுந்தரராசா குடும்பம் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 550,000 |
| 8 | வ.கணபதிப்பிள்ளை (லிங்கம்) | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 200,000 |
| 9 | மணிவண்ணன் சுமங்கலா | மீசாலை வடக்கு, (பிரான்ஸ்) | 200,000 |
| 10 | Canceled | | |
| 11 | சுந்தரம் பாக்கியலீலா | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 25,000 |
| 12 | ஆறுமுகம் நவரத்தினம் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 25,000 |
| 13 | கஜன் கெங்கா | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 35,000 |
| 14 | சசிகரன் அர்ச்சனா | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 30,000 |
| 15 | மு.கணபதிப்பிள்ளை (CTB) கமலினி | மீசாலை வடக்கு, கொடிகாமம் (லண்டன்) | 75,000 |
| 16 | வேலுப்பிள்ளை பிரதீபன் | மீசாலை வடக்கு, கொடிகாமம் (லண்டன்) | 35,000 |
| 17 | நாகராசா கேதீஸ்வரன் அனுசா முருகானந்தன் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 200,000 |
| 18 | மணிவண்ணன் சுமங்கலா | மீசாலை வடக்கு, கொடிகாமம் (பிரான்ஸ்) | 200,000 |

| | | | |
|---|---|---|---|
| 19 | வ.பரமசாமி சரஸ்வதி குடும்பம் | மீசாலை கிழக்கு, மீசாலை | 500,000 |
| 20 | கி.தங்கமணி குடும்பம் | மீசாலை வடக்கு, கொடிகாமம் (கனடா) | 20,000 |
| 21 | அ.கிருபாலினி | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 10,000 |
| 22 | குலேபா ஜெயக்குமார் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 100,000 |
| 23 | கோகுலரூபி துஷ்யந்தன் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 60,000 |
| 24 | கந்தசாமி மயூரன் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 5,000 |
| 25 | மணிவண்ணன் சுமங்கலா | மீசாலை வடக்கு (பிரான்ஸ்) | 300,000 |
| 26 | கவிதா சிவகுமார் | மீசாலை கிழக்கு (லண்டன்) | 100,000 |
| 27 | ச.கமலினி (கணபதிப்பிள்ளை) | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 75,000 |
| 28 | யோ.அருந்தவம் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 25,000 |
| 29 | வே.குமாரவேல் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 45,000 |
| 30 | விநாயகமூர்த்தி வாகீசன் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 50,000 |
| 31 | வேலாயுதம்பிள்ளை குடும்பம் | மீசாலை வடக்கு, (சுவிஸ்) | 1300,000 |
| 32 | சுபாஸ் இராஜேஸ்வரி | மீசாலை வடக்கு, (கனடா) | 187,000 |
| 33 | வேலாயுதம்பிள்ளை குடும்பம் | மீசாலை வடக்கு, (சுவிஸ்) | 175,000 |
| 34 | மு.சிவசுப்பிரமணியம் | மீசாலை வடக்கு, மீசாலை | 35,000 |
| 35 | வை.பரமசாமி | மீசாலை கிழக்கு, மீசாலை | 35,000 |
| 36 | | Cancel | |
| 37 | வாரித்தம்பி தெவேந்திரன் | மீசாலை வடக்கு, (கனடா) | 215,000 |
| 38 | பொ.சந்திரநாதன் | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 150,000 |
| 39 | அமரர் சண்முகநாதன் யோகேஸ்வரி | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 400,000 |
| 40 | கு.சிவானந்தம் வசந்தி | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 50,000 |
| 41 | வா.நாகேந்திரம் | மீசாலை வடக்கு, கொடிகாமம் (சுவிஸ்) | 500,000 |
| 42 | கு.சிவானந்தம் வசந்தி | மீசாலை வடக்கு, கொடிகாமம் | 100,000 |
| 43 | சுப்பிரமணியம் உதயகுமார் | மீசாலை கிழக்கு, மீசாலை | 35,000 |
| 44 | அ.நாகேந்திரம் | கெருடாவில் சாவகச்சேரி | 150,000 |
| 45 | எஸ்.கமலினி (கணபதிப்பிள்ளை) | மீசாலை கிழக்கு, (லண்டன்) | 50,000 |
| | **மொத்தம்** | | **15107,107** |

## திருப்பணி செலவு விபரம்

| உறு. சீ.இ | திகதி | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 01 | 21.12.2023 | சி.சிங்கராசா | நில வேலை ரெறாசோ | 1000,000 |
| 02 | 27.12.2023 | சு.துரைசிங்கம் | வர்ணவேலை | 5,000 |
| 03 | 27.12.2023 | நா.இன்பராஜ் | அரிகல் கொடுப்பனவு | 20,000 |
| 04 | 28.12.2023 | சி.சிங்கராஜா | நில வேலை | 1000,000 |
| 05 | 09.01.2024 | சி.சிங்கராசா | நில வேலை | 1000,000 |
| 06 | 10.01.2024 | சக்தி பதிப்பகம் | பற்றுச்சீட்டு (நோட்டீஸ்) | 2,400 |
| 07 | 13.01.2024 | சி.சிங்கராசா | நில வேலை (Taraso) | 500,000 |
| 08 | 21.01.2024 | சி.சிங்கராசா | நில வேலை (Taraso) | 275,000 |
| 09 | 31.01.2024 | சி.சிங்கராசா | நில வேலை (Taraso) | 800,000 |
| 10 | 04.02.2024 | சி.சிங்கராசா | நில வேலை (Taraso) | 500,000 |
| 11 | 11.02.2024 | சி.சிங்கராசா | நில வேலை (Taraso) | 300,000 |
| 12 | 22.02.2024 | சு.துரைசிங்கம் | வர்ண வேலை (Painting) | 800,000 |
| 13 | 28.02.2024 | சி.சிங்கராசா | நில வேலை (Taraso) | 250,000 |
| 14 | 17.03.2024 | சி.சிங்கராசா | நில வேலை (Taraso) | 375,000 |
| 15 | 09.05.2024 | சு.துரைசிங்கம் | வர்ண வேலை (Painting) | 100,000 |
| 16 | 24.06.2024 | சி.சிங்கராசா | நில வேலை (Taraso) | 800,000 |
| 17 | 24.06.2024 | சக்தி பதிப்பகம் | பற்றுச்சீட்டு (Notices) | 12,450 |
| 18 | 12.06.2024 | சி.சிங்கராசா | நில வேலை (Taraso) | 100,000 |
| 19 | 28.06.2024 | CB Consturction | வீதி வேலை | 409,300 |
| 20 | 25.06.2024 | கு.குணசேகரம் | ஏற்றுக்கூலி | 2,500 |
| 21 | 25.06.2024 | குமாரகுலசிங்கம் | சமித்து சேர்த்தமை | 5,500 |
| 22 | 25.06.2024 | CB Consturction | வீதி வேலை / உபசரணை கொடுப்பனவு | 7,200 |
| 23 | 25.06.2024 | ஆ.நிஷாந்தன் | கோவில் துப்பரவு பணி | 35,000 |
| 24 | 27.06.2024 | சு.துரைசிங்கம் | வர்ண வேலை (Painting) | 50,000 |
| 25 | 27.06.2024 | N.லதீசன் | சமித்து வெட்டியவை | 3,000 |
| 26 | 27.06.2024 | M.நிஷாந்தன் | வீதிக்கு கல் பரவியமை | 18,000 |
| 27 | 14.07.2024 | S.மயூரன் | அரிகல் சீமெந்து வழங்கியமை | 48,500 |
| 28 | 15.07.2024 | சு.துரைசிங்கம் | வர்ண வேலை (Painting) | 200,000 |
| 29 | 24.07.2024 | ஜெ.செந்தூரன் | கேணி (சுரி அகழ்வு) | 4,000 |
| 30 | 24.07.2024 | சு.துரைசிங்கம் | வர்ண வேலை (Painting) | 100,000 |
| 31 | 25.07.2024 | சு.துரைசிங்கம் | வர்ண வேலை (Painting) | 200,000 |
| 32 | 26.07.2024 | சி.சிங்கராசா | நில வேலை (Taraso) | 200,000 |
| 33 | 26.07.2024 | து.காண்டீபன் | வேப்ப மரம், மா மரம் தறித்தது | 12,500 |

| | | | | |
|---|---|---|---|---|
| 34 | 28.07.2024 | இ.கண்ணண் | கிரவல் ஏற்றி பறித்தது | 43,000 |
| 35 | 28.07.2024 | சு.ஜெயசுதன் | மண் ஏற்றி பறித்தது | 8,000 |
| 36 | 28.07.2024 | வெ.கிருஸ்ணதரன் | 4 படங்கள் வரைந்தது | 100,000 |
| 37 | 28.07.2024 | ச.முருகதாஸ் | மதில் பின் புறம் கொங்கிரீட் இட்டது | 52,000 |
| 38 | 29.07.2024 | பா.நிரஞ்சன் | யாகசாலை குண்டங்கள் வைத்தது, கட்டியது | 140,000 |
| 39 | 30.07.2024 | சு.துரைசிங்கம் | வர்ண வேலை (Painting) | 300,000 |
| 40 | 30.07.2024 | செ.மயுரன் | அரிகல் சீமெந்து வழங்கியமை | 24,920 |
| 41 | 30.07.2024 | k.s.k.காட்வெயார் | 01 சீமெந்து பை | 2,050 |
| 42 | 30.07.2024 | வேலவன் காட்வெயார் | னைலோன் கயிறு 01 கட்டு | 7,500 |
| 43 | 05.08.2024 | இ.வி.கலர் லாப் | பனர் செய்தமை | 18,000 |
| 44 | 06.08.2024 | சக்தி பதிப்பகம் | பிரசுரம் செய்தமை | 6,540 |
| 45 | 06.08.2024 | இராசன் | கூலி கொடுப்பனவு | 10,900 |
| 46 | 06.08.2024 | குமாரகுலசிங்கம் | சமித்து வெட்டியமை | 10,000 |
| 47 | 01.08.2024 | சு.துரைசிங்கம் | வர்ணவேலை | 200,000 |
| 48 | 08.08.2024 | ந.பரமேஸ்வரன் | கதவு வேலை | 32,000 |
| 49 | 12.08.2024 | பா.நிரஞ்சன் | யாக மண்டபங்கள் கலசம் துப்பரவு | 20,000 |
| 50 | 12.08.2024 | திருகணித பதிப்பகம் | இறப்பர் முத்திரை | 2,000 |
| 51 | 12.08.2024 | விக்னேஸ்வரா வாணிபம் | வெற்று பை | 700 |
| 52 | 12.08.2024 | சு.துரைசிங்கம் | வர்ண வேலை (Painting) | 250,000 |
| 53 | 14.08.2024 | தரிசன் வேம்பிராய் | கூலி | 21,000 |
| 54 | 14.08.2024 | எஸ்.மயூரன் | அரிகல்லு | 15,100 |
| 55 | 10.09.2024 | கு.சிவானந்தம் | கல்சியம் நீக்கி | 1,800 |
| 56 | 10.09.2024 | கு.சிவானந்தம் | பைப்லைன் திருத்தம் | 6,880 |
| 57 | 10.09.2024 | கு.சிவானந்தம் | களஞ்சிய அறைகளுக்கு சீற் அமைத்தது | 44,400 |
| 58 | 10.09.2024 | சு.துரைசிங்கம் | வர்ணவேலை | 550,000 |
| 59 | 23.09.2024 | சி.சிங்கராசா | ரெறாசோ வேலை கொடுப்பனவு | 550,000 |
| | | **மொத்தம்** | | **11552,140** |

| | |
|---|---|
| சி.சிங்கராசா ரெறாசோ வேலை | - 7,650,000 |
| சு.துரைசிங்கம் வர்ணவேலை | - 2,755,000 |

# திருப்பணி செலவு விபரம் கட்டம் - 2

| | | |
|---|---|---|
| A | வாரித்தம்பி தேவேந்திரன், மணிவண்ணன் சுமந்தா பஞ்சமுகப்பிள்ளையார் சபை அமைப்பு, மற்றும் வேலைகள் | 1148,360 |
| 1 | சகடைக்கான புதிய இருப்பிட அமைப்பு | 63,600 |
| 2 | கோவில் உட்புற சிலைகள் நாசித் தலைகள் அமைப்பு | 73,000 |
| 3 | தீர்த்தக்கரை வடக்கு வீதி மதில் கட்டுமான அமைப்பு | 112,300 |
| 4 | சுற்றுமதில் நடைபாதை சமித்து அறை அமைப்பு | 272,620 |
| 5 | பழைய முகடு மாற்றியமைக்கான செலவு | 11,850 |
| 6 | பெரிய மண்டப தீராந்திகள் சீர் செய்தமை | 28,142 |
| 7 | 2ம், 3ம் மண்டப சீற்றுகள் மாற்றி திருத்தியது | 90,184 |
| 8 | கொடிக்கம்பத்தின் மேற்பகுதி மாற்றியமைக்கப்பட்டது | 57,150 |
| 9 | மகாமண்டப மேற்பகுதி சீற் அடித்து அலங்காரம் | 230,020 |
| 10 | வெளிப்புற சில்வர் கேற் செய்து பொருத்தியது உபயம் :- கணபதிப்பிள்ளை C.T.B (கமலினி) | 262,000 |
| 11 | ஒலி, ஒளி அறை, கிணற்று மூடி அமைப்பு | 42,000 |
| 12 | 4 அறைகளுக்குரிய பலகை அடித்தல் | 89,185 |
| 13 | ஆசாரியாரின் சில்லறை வேலைகளுக்கான கூலி | 31,000 |
| 14 | மின்சார இணைப்புக்கான சிபார்சு செய்ததற்கான கொடுப்பனவு | 20,000 |
| 15 | A+B+C தீத்தக் கிணறு பைப் மாற்றியது, 50w Bulb ஏனையவை 6245 + 6440 + 13470 (ப/சீட்டு இலக்கங்கள்) | 26,205 |
| 16 | வேலாயுதம்பிள்ளை குடும்பத்தவரின் அன்பளிப்பில் செய்து முடிக்கப்பட்ட வேலைகள் விபரம் கோவையில் உள்ளது | 1524,990 |
| 17 | வா.நாகேந்திரம் ஒலிபெருக்கி சாதனம் கொள்வனவு | 342,163 |
| 18 | J.ஜெகதீபன், கொக்குவில் நந்தி பலிபீடத்திற்கான சில்வர் கேற் (உபயம் :- சுபாஸ் இராஜேஸ்வரி) | 187,000 |
| 19 | J.ஜெகதீபன் கொக்குவில் பரிவார மூர்த்திகளுக்கான சில்வர் கேற் (உபயம் :- வேலாயுதம்பிள்ளை குடும்பம்) | 175,000 |
| | | **4786,769** |

## கும்பாபிஷேக வரவு

| ப.சீ.இல | | தொகை |
|---|---|---|
| 51 | கண்ணதாசன் கலைமகள் குடும்பம் மீசாலை வடக்கு, கொடிகாமம். | 32,850 |
| 52 | வே.நாகநாதன் மீசாலை வடக்கு, கொடிகாமம். | 5,000 |
| 53 | சிறீகாந்தன் அருள்ராஜ் மீசாலை வடக்கு, கொடிகாமம். | 5,000 |
| 54 | இ.பாஸ்கரன் மீசாலை வடக்கு, கொடிகாமம். | 10,000 |
| 55 | இ.சுதாகரன் மீசாலை வடக்கு, கொடிகாமம். | 10,000 |
| 56 | கு.செல்லத்துரை மீசாலை வடக்கு, மீசாலை | 5,000 |
| 57 | சி.ஜெயலட்சுமி மீசாலை வடக்கு, மீசாலை | 5,000 |
| 58 | சிங்காரன் வித்தகம் மீசாலை வடக்கு, மீசாலை | 5,000 |
| 59 | சி.பாலலட்சுமி மீசாலை வடக்கு, மீசாலை | 5,000 |
| 60 | அன்பழகன் கவிதா பிரான்ஸ் | 50,000 |
| 61 | அமரர் சி.இராமலிங்கம் குடும்பம் மீசாலை வடக்கு, மீசாலை | 100,000 |
| 62 | க.மகேஸ்வரி மீசாலை வடக்கு, மீசாலை | 25,000 |
| 63 | கிருபாலினி அமிர்தகுலசிங்கம் மீசாலை வடக்கு, மீசாலை | 10,000 |
| 64 | ஏரம்பு குடும்பம் மீசாலை வடக்கு, மீசாலை | 10,000 |
| 65 | வேலாயுதம்பிள்ளை குடும்பம் சுவீஸ் | 100,000 |
| 66 | ராணி சுந்தரலிங்கம் சங்கத்தானை, சாவகச்சேரி | 76,800 |
| 67 | மு.சிவசுப்பிரமணியம் குடும்பம் மீசாலை வடக்கு, மீசாலை | 100,000 |
| 68 | பொ.சந்திரநாதன் குடும்பம் மீசாலை வடக்கு, மீசாலை | 100,000 |
| 69 | ஆறுமுகம் செல்வராசா மீசாலை வடக்கு, மீசாலை | 25,000 |
| 70 | குமார் தரிசா மீசாலை வடக்கு, கொடிகாமம் | 10,000 |
| 71 | க.பரதீபன் மீசாலை வடக்கு, கொடிகாமம் | 50,000 |
| 72 | சண்முகரட்ணம் சந்திரமதி மீசாலை வடக்கு, மீசாலை | 50,000 |
| 73 | தியாகராசா சத்தியா கச்சாய்வீதி, கொடிகாமம் | 10,000 |
| 74 | சு.பாக்கியராசா மீசாலை வடக்கு, மீசாலை | 10,000 |
| 75 | திலகரத்தினம் குடும்பம் மீசாலை வடக்கு கொடிகாமம் | 100,000 |
| 76 | பொன்னுத்துரை நாகராசா மீசாலை வடக்கு கொடிகாமம் | 50,000 |
| 77 | பொ.தேவராசா மீசாலை வடக்கு கொடிகாமம் | 25,000 |
| 78 | ப.கஜீதன் மீசாலை வடக்கு கொடிகாமம் | 5,000 |
| 79 | சின்னையா சேதுப்பிள்ளை மீசாலை வடக்கு கொடிகாமம் | 25,000 |
| 80 | பத்மதேவா இராசேஸ்வரி மீசாலை வடக்கு கொடிகாமம் | 10,000 |
| 81 | செந்தில் பாலேஸ்வரி, மீசாலை வடக்கு கொடிகாமம் | 10,000 |
| 82 | கோமகன் சிவனேசன் மீசாலை வடக்கு மீசாலை | 5,000 |
| 83 | த.கணபதிப்பிள்ளை மீசாலை வடக்கு கொடிகாமம் | 4,000 |
| 84 | கேமா மதனகுமார் மீசாலை வடக்கு கொடிகாமம் | 100,000 |
| 85 | நிதர்சனா கோகுலராஜ் மீசாலை வடக்கு கொடிகாமம் | 100,000 |
| 86 | ஆ.வைரவநாதன் மீசாலை வடக்கு கொடிகாமம் | 100,000 |

| | | |
|---|---|---|
| 87 | கந்தசாமி குடும்பம் மீசாலை வடக்கு மீசாலை | 5,000 |
| 88 | யோகேஸ்வரன் குடும்பம் மீசாலை வடக்கு மீசாலை | 5,000 |
| 89 | தனபாலசிங்கம் குடும்பம் மீசாலை வடக்கு மீசாலை | 5,000 |
| 90 | சி.விமலகுமார் மீசாலை வடக்கு மீசாலை | 5,000 |
| 91 | மணிவண்ணன் சுமங்கலா, மீசாலை வடக்கு, (பிரான்ஸ்) | 100,000 |
| 92 | சு.சசிகுமார் குடும்பம் மீசாலை வடக்கு, (லண்டன்) | 100,000 |
| 93 | சு.சிறீகுமார் மீசாலை வடக்கு, கொடிகாமம் (கனடா) | 100,000 |
| 94 | ஆ.குமாரவேலு மீசாலை வடக்கு, கொடிகாமம் | 25,000 |
| 95 | விவேகானந்தன் சந்திரலீலா மீசாலை வடக்கு, கொடிகாமம் | 25,000 |
| 96 | வே.நாகநாதன் மீசாலை வடக்கு, கொடிகாமம் | 15,000 |
| 97 | அனுசன் மதுசனா மீசாலை வடக்கு, மீசாலை | 50,000 |
| 98 | சங்கரஈஸ்வரன் பிறேமினி மீசாலை வடக்கு, கொடிகாமம் | 20,000 |
| 99 | குலசிங்கம் கமலாம்பிகை மீ.வ, கொடிகாமம் (கனடா) | 50,000 |
| 100 | புஸ்பகலா திருக்குமார் மீசாலை வடக்கு, கொடிகாமம் (கனடா) | 50,000 |
| 101 | சதானந்தம் றூபவதி (தேவி) மீசாலை வடக்கு, கொடிகாமம் | 100,000 |
| 102 | தம்பு, கனகசபை மீசாலை வடக்கு, கொடிகாமம் | 5,000 |
| 103 | அருந்தவம் யோகராசா மீசாலை வடக்கு, கொடிகாமம் | 40,000 |
| 104 | ஐ.இராசதுரை மீசாலை வடக்கு, கொடிகாமம் | 5,000 |
| 105 | மகாலிங்கம் செந்தில் குமரன் மீசாலை வடக்கு, கொடிகாமம் | 5,000 |
| 106 | மகிந்தன் தீபா குடும்பம் மீசாலை வடக்கு, கொடிகாமம் | 50,000 |
| 107 | சி.பாலசுப்பிரமணியம் மீசாலை வடக்கு, இராமாவில் | 1,000 |
| 108 | சரவணமுத்து சின்னத்துரை மீசாலை வடக்கு, கொடிகாமம் | 10,000 |
| 109 | சி.பாலநேந்திரன் மீசாலை வடக்கு, கொடிகாமம் | 5,000 |
| 110 | க.சுகுமார் குடும்பம் மீசாலை வடக்கு, கொடிகாமம் | 10,000 |
| 111 | ஏ.நடுச்சாய் மீசாலை வடக்கு, கொடிகாமம் | 5,000 |
| 112 | ர.கேசரன் மீசாலை வடக்கு, கொடிகாமம் | 5,000 |
| 113 | க.புஸ்பவேணி மீசாலை வடக்கு, கொடிகாமம் | 2,000 |
| 114 | இ.சந்திரசேகரம் மீசாலை வடக்கு, கொடிகாமம் | 20,000 |
| 115 | ஜெயசிங்கம் சிரோன்மணி, மீசாலை வடக்கு, கொடிகாமம் | 5,000 |
| 116 | பாஸ்கரன் சுகந்தினி சாவகச்சேரி வடக்கு | 5,000 |
| 117 | பாக்கியலீலா வெற்றி மீசாலை வடக்கு, கொடிகாமம் | 3,000 |
| 118 | சிவஞானலிங்கம் நவா விடத்தற்பளை | 5,000 |
| 119 | ந.புவனேஸ்வரி குடும்பம் மீசாலை வடக்கு, கொடிகாமம் | 2,000 |
| 120 | அபிரா, அபிதா மீசாலை வடக்கு, கொடிகாமம் | 1,000 |
| 121 | தர்மலிங்கம் செந்தூரன் மீசாலை வடக்கு, கொடிகாமம் | 22,000 |
| 122 | தி.கர்சன், மீசாலை வடக்கு, கொடிகாமம் | 10,000 |
| 123 | கந்தசாமி அழகம்மா மீசாலை வடக்கு, கொடிகாமம் | 5,000 |
| 125 | கலாநிதி குமாரகுலம் மீசாலை வடக்கு, மீசாலை | 25,000 |
| 124 | மனோராஜ் சிவமலர் மீசாலை வடக்கு, கொடிகாமம் | 5,000 |
| 151 | கு.மகேந்திரம் மீசாலை வடக்கு, கொடிகாமம் | 10,000 |

| | | |
|---|---|---|
| 152 | தவராசா அர்சினி மீசாலை மேற்கு, மீசாலை | 50,000 |
| 153 | லிங்கேஸ் யனுசன் மிருசுவில் | 10,000 |
| 154 | பொன்னம்பலம் குடும்பம் மீசாலை வடக்கு, கொடிகாமம் | 11,100 |
| 155 | பொன்னுத்துரை குடும்பம் மீசாலை வடக்கு, கொடிகாமம் | 72,300 |
| 156 | சுபாஸ் இராசேஸ்வரி மீசாலை வடக்கு, கொடிகாமம் (கனடா) | 10,000 |
| 157 | ஜெயா குடும்பம் மீசாலை வடக்கு, புளியம்பொக்கணை | 5,000 |
| 158 | கனகசுந்தரம் வரதீஸ் வரன் மீசாலை வடக்கு, மீசாலை. | 5,000 |
| 159 | ஜே.ஜெயக்குமார் மீசாலை வடக்கு, புளியம்பொக்கணை | 2,000 |
| 160 | ச.குருபரன் மீசாலை வடக்கு, கொடிகாமம் | 100,000 |
| 161 | அ.பாலசிங்கம் குடும்பம் மீசாலை வடக்கு, பலாலி | 100,000 |
| 162 | வ.திருநாவுக்கரசு மீசாலை வடக்கு, கொடிகாமம் | 2,000 |
| 163 | திருமதி. இராசம்மா ராசன் (பாக்கியம்) மீசாலை வடக்கு, கொடிகாமம் | 50,000 |
| 164 | நந்தகுமார் குடும்பம், மீசாலை வடக்கு, கொடிகாமம் | 50,000 |
| 165 | பத்மநாதன் குடும்பம், மீசாலை வடக்கு, கொடிகாமம் | 10,000 |
| 166 | ச.பரமநாதன் குடும்பம், மீசாலை வடக்கு, கொடிகாமம் (ஜேர்மனி) | 25,000 |
| 167 | க.சிவசோதி, மீசாலை வடக்கு, கொடிகாமம் | 10,000 |
| 168 | மு.கிருஷ்ணராஜா மீசாலை வடக்கு, கொடிகாமம் | 10,000 |
| 169 | சிவானந்தம் அக்ஷயன் மீசாலை வடக்கு, கொடிகாமம் | 10,000 |
| 170 | சற்குணதேவி கணபதிப்பிள்ளை மீசாலை வடக்கு, கொடிகாமம் | 50,000 |
| 171 | சுப்பிரமணியம் பிரபாகர் மீசாலை, யாழ்ப்பாணம் | 500,000 |
| 172 | தம்பிராசா இராசலிங்கம் மீசாலை வடக்கு, கொடிகாமம் | 5,000 |
| 173 | சுப்பிரமணியம் உதயகுமார் மீசாலை கிழக்கு, (கனடா) | 115,860 |
| 174 | ம.வர்சிகன் மீசாலை வடக்கு, கொடிகாமம் | 500 |
| 175 | அருட்செல்வன் மீசாலை வடக்கு, கொடிகாமம் | 2,000 |
| | **மொத்தம்** | **3465,410** |

## கும்பாபிஷேக செலவு விபரம் கட்டம் 1

| **உ.சீ இல** | **விபரம்** | **தொகை** |
|---|---|---|
| 1 | ஜெகதீஸ்வரசர்மா தெர்ப்பைக் கயிறு | 50,100 |
| 2 | பத்மறஞ்சனா படமாடம் | 1,500 |
| 3 | கோ.சிறீதரன் யாகப் பந்தல் மாலை | 110,000 |
| 4 | பா.நிரஞ்சன் பாலஸ்தாபன செலவு | 90,000 |
| 5 | பா.முரளிதரக் குருக்கள் மற்றும் ஏனைய குருக்கள் கொடுப்பனவு | 1178,000 |
| 6 | பாகசாலைப் பொருட்கள் கொள்வனவு | 61,912 |
| 7 | இ.பரமேஸ்வரன் ஒலி, ஒளி சேவை | 70,000 |
| 8 | உ.லவன் மேளவாத்தியச் செலவு | 106,000 |

| | | |
|---|---|---|
| 9 | சாத்துப்படி கொடுப்பனவு | 5,000 |
| 10 | கௌரவிப்பு நிகழ்வின் போதன தட்சணை | 36,000 |
| 11 | இராசன் ஆலய துப்பரவுக் கூலி | 27,000 |
| 12 | கும்பாபிஷேக நாள் அன்னதான செலவு | 85,195 |
| 13 | முரளிதரக் குருக்கள் இயந்திர பூசைச் செலவு | 60,000 |
| 14 | தங்கேஸ்வரி மாலைச் செலவு | 12,200 |
| 15 | கும்பாபிஷேகம் சம்மந்தமான குருக்கள் மரக்கறி மற்றும் பொருட்கள் செலவு | 61,550 |
| 16 | சுமுகலிங்கம் நேர்முக வர்ணனை | 3,000 |
| 17 | றஞ்சனாஸ் புடவை | 22,000 |
| 18 | KSK காட்வெயார் சில்லறைப் பொருட்கள் | 5,380 |
| 19 | K.கேசவராஜ் நீத்துப் பூசணிக்காய் | 3,300 |
| 20 | ப.சிறீகாந்தா வாழைக்குலை | 8,800 |
| 21 | தரிசன், மீசாலை கதிரை மற்றும் பொருள் | 30,020 |
| 22 | தட்சணைகள் குருக்கள் ஏனையவை | 26,000 |
| 23 | வே.குமாரவேலு கும்பாபிஷேகத்திற்கான பழங்கள் | 22,780 |
| 24 | மகேந்திரன் கொடுப்பனவு | 38,000 |
| 25 | இரவுக் காவலாளிகள் கொடுப்பனவு | 6,000 |
| 26 | E.V ஸ்ரூடியோ கும்பாபிஷேகம் live | 20,000 |
| 27 | தரிசன் வேம்பிராய் பாத்திரங்கள் துப்பரவு | 6,000 |
| 28 | மகேந்திரன் பலவேலை | 4,000 |
| 29 | USB | 1,500 |
| 30 | க.சுகுமார் மீசாலை, துப்பரவுப் பணி | 6,500 |
| 31 | ஆட்டோ கூலி ஒலிபெருக்கி அறிவித்தல் | 3,000 |
| 32 | சு.பிரபாகரன் மூலம் செய்யப்பட்ட செலவு விபரம் (கலசங்கள், இயந்திரத் தகடு, பஞ்சலோகம், பட்டுக்குடை, அம்பாள் விக்கிரகம் என்பன) | 414,000 |
| | **மொத்தம்** | **2574,737** |

## கும்பாபிஷேகம் தொடர்பான செலவு விபரம் கட்டம் - 02

| உ.சீ இல | விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | எ.ஏகாம்பரம் 1623, 1624, 1657 புடவை 140000 + 3000 | 143,000 |
| 2 | எ.ஏகாம்பரம் 1876, 1627, 1656 புடவை 11900 + 1800 + 3000 | 16,700 |
| 3 | எ.ஏகாம்பரம் 2421, 2774, 3105 புடவை (36800 - 16300) | 20,500 |
| 4 | சுந்தரம் பிறதேர்ஸ் 715/ 10.08.2024 அபிஷேக பொருட்கள் | 81,400 |

| | | |
|---|---|---|
| 5 | 716 சுந்தரம் பிறதேர்ஸ் அபிஷேக பொருட்கள் | 45,950 |
| 6 | 717 சுந்தரம் பிறதேர்ஸ் அபிஷேக பொருட்கள் | 95,845 |
| 7 | 721, 816 சுந்தரம் பிறதேர்ஸ் அபிஷேக பொருட்கள் | 36,370 |
| 8 | ப.சீட்டுக்கள் (திரைச்சீலை, பால், தயிர், ஏனையவை) | 22,068 |
| 9 | ப.சீட்டுக்கள் (அபிஷேக பொருட்கள், காபெற்) | 16,015 |
| 10 | ப.சீட்டுக்கள் (பசன்கவுஸ், பேப்பர் கவுஸ் ஏனையவை) | 18,230 |
| 11 | வளர்மதி, TCT | 11,900 |
| 12 | ப.சீட்டுக்கள் (பழவகை, பழப்புளி) | 9,190 |
| 13 | கிருஷ்ணா சிற்பத் தொழிலகம் | 76,000 |
| 14 | கிருஷ்ணா சிற்பத் தொழிலகம் | 77,500 |
| 15 | முரளி ஐயா பொருட்கள் | - |
| 16 | நெய், தேன் கொடுப்பனவு (நிறஞ்சன் கணேசசர்மா) | 106,200 |
| 17 | வாழைப்பழம் தசீலன் | 10,920 |
| 18 | தட்சணைகள், தாமரைப்பூ, கற்பூரம், ஏனையவை | 51,100 |
| | **மொத்தம்** | **838,888** |

செலவுகள் சம்மந்தமான உறுதி சீட்டுக்கள், பற்றுச் சீட்டுக்கள் ஆகியவை கோவையில் இணைக்கபட்டுள்ளது. பார்வையிட விரும்புவோர் நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

## மண்டலாபிஷேகம் வரவு

| ப.சீ இல | விபரம் | | தொகை |
|---|---|---|---|
| 126 | மதனகுமார் கேமா | மீசாலை வடக்கு கொடிகாமம் | 100,000 |
| 127 | ஏ.தியாகராசா குடும்பம் | மீசாலை வடக்கு கொடிகாமம் | 100,000 |
| 128 | மணிவண்ணன் சுமங்கலா குடும்பம் | மீசாலை வடக்கு கொடிகாமம் | 100,000 |
| 129 | சு.விஜயகுமார் குடு | மீசாலை வடக்கு கொடிகாமம் | 100,000 |
| 130 | சங்கரஈஸ்வரன் பிறேமினி குடும்பம் | மீசாலை வடக்கு கொடிகாமம் | 100,000 |
| 131 | சயிலா சுதாகரன் | மீசாலை வடக்கு கொடிகாமம் | 100,000 |
| 132 | வேலாயுதம்பிள்ளை குடும்பம் | மீசாலை வடக்கு கொடிகாமம் | 100,000 |
| 133 | ஆ.செல்வராசா குடும்பம் | மீசாலை மேற்கு மீசாலை | 100,000 |
| 134 | செ.பத்மநாதன் குடு | மீசாலை வடக்கு கொடிகாமம் | 100,000 |
| 135 | வே.நாகநாதன் குடு | மீசாலை வடக்கு கொடிகாமம் | 100,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 136 | கலைமகள் கண்ணதாசன் குடு | மீசாலை வடக்கு | கொடிகாமம் | 100,000 |
| 137 | திலகரத்தினம் குடும்பம் | மீசாலை வடக்கு | கொடிகாமம் | 20,000 |
| 138 | நல்லையா புவனேஸ்வரி குடு | மீசாலை வடக்கு | கொடிகாமம் | 100,000 |
| 139 | கதிர்காமர் பரமேஸ்வரி குடும்பம் | மீசாலை வடக்கு | கொடிகாமம் | 60,000 |
| 140 | பொ.தேவராசா குடும்பம் | மீசாலை வடக்கு | கொடிகாமம் | 100,000 |
| 141 | பா.நந்தகுமாரி குடும்பம் | மீசாலை வடக்கு | மீசாலை | 100,000 |
| 142 | வே.நாகநாதன் | மீசாலை வடக்கு | கொடிகாமம் | 9,000 |
| 143 | அபிசேக திரவியம் வழங்கிய வகையால் | | | 14,000 |
| | **மொத்தம்** | | | **1503,000** |

இவர்கள் வழங்கிய பணத்திற்கு அமைவாக மண்டலாபிஷேக நிகழ்வுகள் அன்னதானம் உட்பட மேற்கொள்ளப்பட்டது. ஏனைய மேலும் சிலர் நேரடியாக செலவுகளைச் செய்து மண்டலாபிஷேக உபயங்களைச் செய்து கொண்டனர்.

தொடர்ந்து 21.09.2024 சனிக்கிழமை அன்று சங்காபிஷேகம் உபயகாரர்களின் பங்களிப்புடன் நடைபெற்றது.

## மண்டலாபிஷேக உபயகாரர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1 | 24.08.2024 | சனி | க.வேலாயுதபிள்ளை குடும்பம் |
| 2. | 25.08.2024 | ஞாயிறு | சிவபாதம் பத்மாதேவி |
| 3 | 26.08.2024 | திங்கள் | மணிவண்ணன் சுமங்கலா, கு.கமலாம்பிகை |
| 4 | 27.08.2024 | செவ்வாய் | சங்கரஈஸ்வரன் பிரேமினி |
| 5 | 28.08.2024 | புதன் | புஸ்பகலா திருக்குமரன் |
| 6 | 29.08.2024 | வியாழன் | வா.சந்திரதேவன் குடும்பம் |
| 7 | 30.08.2024 | வெள்ளி | க.சுகுமார் குடும்பம் |
| 8 | 31.08.2024 | சனி | சயிலா சுதாகரன் குடும்பம் |
| 9 | 01.09.2024 | ஞாயிறு | செ.பத்மநாதன் குடும்பம் |
| 10 | 02.09.2024 | திங்கள் | ந.பாலசந்திரன் குடும்பம் |
| 11 | 03.09.2024 | செவ்வாய் | க.சுந்தரராசா |
| 12 | 04.09.2024 | புதன் | வே.நாகநாதன் |
| 13 | 05.09.2024 | வியாழன் | கலைமகள் கண்ணதாசன் |
| 14 | 06.09.2024 | வெள்ளி | திலகரத்தினம் குடும்பம் |

| | | | |
|---|---|---|---|
| 15 | 07.09.2024 | சனி | பொ.சந்திரநாதன் |
| 16 | 08.09.2024 | ஞாயிறு | சுபாமதி இராஜசிங்கம் |
| 17 | 09.09.2024 | திங்கள் | ஆ.செல்வராசா |
| 18 | 10.09.2024 | செவ்வாய் | கு.சிவானந்தம் |
| 19 | 11.09.2024 | புதன் | சர்மிளா குடும்பம் |
| 20 | 12.09.2024 | வியாழன் | கதிர்காமு பரமேஸ்வரி குடும்பம் |
| 21 | 13.09.2024 | வெள்ளி | திருமதி இராசன் நாகம்மா குடும்பம் |
| 22 | 14.09.2024 | சனி | நா.கேதீஸ்வரன் |
| 23 | 15.09.2024 | ஞாயிறு | ஏ.தியாகராசா குடும்பம் |
| 24 | 16.09.2024 | திங்கள் | பா.நந்தகுமாரி குடும்பம் |
| 25 | 17.09.2024 | செவ்வாய் | பொ.தேவராசா குடும்பம் |
| 26 | 18.09.2024 | புதன் | சு.விஜயகுமார் |
| 27 | 19.09.2024 | வியாழன் | மதனகுமார் கேமா குடும்பம் |
| 28 | 20.09.2024 | வெள்ளி | திருமதி.ந.புவனேஸ்வரி குடும்பம் |
| 29 | 21.09.2024 | சனி | சங்காபிஷேகம் |
| | | | மயில்வாகனம் அன்னப்பிள்ளை குடும்பம் |



## மீசாலை வடக்கு - தட்டாங்குளம்
## அருள்மிகு திருநீலகண்ட பிள்ளையார் ஆலயம்
## திருப்பணி, கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் தொடர்பான
## வரவு செலவு பொழிப்பு

| | | | |
|---|---|---|---|
| திருப்பணி தொடர்பான மொத்த வரவு (21) | ரூபா 15107107 | | |
| கும்பாபிஷேகம் தொடர்பான மொத்த வரவு (42) | ரூபா 3465410 | | |
| மண்டலாபிஷேகம் தொடர்பான மொத்த வரவு (44) | ரூபா 1503000 | | |
| மொத்த வரவு | | **20075517** | **20,075,517** |

| | | | |
|---|---|---|---|
| திருப்பணி செலவு கட்டம் 1 (9) | ரூபா 11552140 | | |
| திருப்பணி செலவு கட்டம் 2 (55) | ரூபா 4786769 | 16338909 | |
| கும்பாபிஷேகம் செலவு கட்டம் 1 (51) | ரூபா 2574737 | | |
| கும்பாபிஷேகம் செலவு கட்டம் 2 (53) | ரூபா 838888 | 3413625 | |
| மண்டலாபிஷேக செலவு (விபரங்கள் கோவையில் உள்ளது) | ரூபா | 1337433 | |
| மொத்த செலவு | | **21089967** | **21,089,967** |
| பற்றாக்குறை | | 1014450 | **1,014,450** |


திருப்பணி முயற்சிகள் சில தமது செலவில் நேரடியாக மேற்கொள்ளப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. திரு.வா.தெய்வேந்திரன் குடும்பம் | பஞ்சமுகப்பிள்ளையார் உபயம் | ரூபா 1350000 |
| 2. திரு.திருமதி சங்கரஈஸ்வரன் பிறேமினி குடும்பம் (சுவிஸ்) | ஆலயத்திற்கான புதிய மின்சுற்று மீள அமைப்பு, மூன்று வழி மின்சார இணைப்பு, (வெளிவீதி மின்சுற்று அமைப்பு) இன்னும் பூர்த்தியாகவில்லை | ரூபா 1300000 |
| 3. அமரர் வை.சுப்பிரமணியம் குடும்பம் | அன்னதான மடம் புனரமைப்பு சுற்றுமதில், கேற் ஏனையவை | ரூபா 2475000 |

| | | |
|---|---|---|
| சு.பிரபாகர் | மு.சிவசுப்பிரமணியம் | ந.பாலசந்திரன் |
| பொருளாளர் | செயலாளர் | தலைவர் |

# கும்பாபிஷேக நிகழ்வின் போது













# கும்பாபிஷேக நிகழ்வின் போது





## மீசாலை வடக்கு தட்டான்குளம் அருள்மிகு திருநீலகண்டப் பிள்ளையார் ஆலய நிர்வாக சபை திருப்பணி சபை பொருளாளரின் அறிக்கை

மேற்படி ஆலயத்தின் 2024ம் ஆண்டிற்கான பெருஞ்சாந்திப் பெருவிழா இனிது நிறைவடைந்து அதனுடன் தொடர்பான கட்டுமான கும்பாபிஷேக கணக்குகளினை சமர்ப்பிப்பதில் மிக மகிழ்ச்சி அடைகிறேன்.

இதற்கு முன்னர் 2024ம் ஆண்டுக்கு முறப்பட்ட பரிபாலனசபைக் கணக்குகள் 2024 ம் ஆண்டு தை மாதம் பொதுக்கூட்டத்தில் வெளியிடப்பட்டு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது யாவரும் அறிந்ததே.

தற்போதைய பொருளாளர் ஆகிய அடியேன் 2011 ம் ஆண்டு பிற்பகுதியில் அப்போதைய தலைவர் இராமு சரவணமுத்து அவர்கள் முன்மொழிய அப்போதைய செயலாளர் வே.நாகராசா அவர்களினால் வழி மொழியப்பட்டு பொருளாளராகி இக் கோயிலுக்கு சேவையாற்றி வருகிறேன். இங்கு வந்ததன் பின்னர் சுற்றுமதிலுடன் கூடிய தீர்த்தக் கேணி அத்துடன் இளைப்பாறும் மண்டபம் பின்னர் எங்கும் இல்லாதவாறு பாதுகாப்பு அறையுடன் கூடிய யாக மண்டபம் முக்கிய களஞ்சிய அறையும் பின்னர் இக் கோயிலின் சுற்று பிரகார மண்டபம் கூரை வேலையும் நில வேலையும் மிக நேர்த்தியாக முடிவடைந்தது. அத்துடன் ஒலி அமைப்பு அறை, குருக்கள் தங்குமிட அறை அத்துடன் சிறப்பாக அமைக்கப்பட்ட இலக்குமி சண்டேஸ்வரர் பரிவார மூர்த்திகள் பழைய வசந்த மண்டபம் மாற்றி அமைக்கப்பட்டு புதிய வசந்த மண்டபம் ஏற்படுத்தப்பட்டது. பின்னர் எமது கோயில் மடப்பள்ளி முழுவதும் பொலிவுடன் நேர்த்தியாக கட்டி முடிக்கப்பட்டது. வெளி வீதி சுலபமாக சித்திரத்தேர் ஓடும் அளவிற்கு செப்பம் செய்யப்பட்டது.

இறுதியாக 2024 ம் ஆண்டிற்கான பெருஞ்சாந்தியின் போது எம்மால் செய்யப்பட்ட வேலைகள் யாவும் எதிர்பார்க்காத அளவிங்கு மிகவும் துல்லியமாகவும் நேர்த்தியாகவும் சிறப்பாகச் செய்யப்பட்டு பிள்ளையாரின் கும்பாபிஷேகப் பெருவிழா பஞ்சகுண்டம் இட்டு மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு ஆறு யாகங்கள் இட்டு மிகச் சிறப்பாக செய்யப்பட்டது யாவரும் அறிந்திருப்பீர்கள்.

இவ் அனைத்திற்கும் உதவிய உள்ளூர் மற்றும் வெளியூர் அன்பர்கள் மற்றும் நல்ல கருத்துக்களை கூறிய அனைவருக்கும் என் சார்பாகவும் எமது சபை சார்பாகவும் மனமுவந்து சிரம் தாழ்த்தி எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும் இனிவரும் காலத்தில் வரும் பொருளாளர் மற்றும் சபை உறுப்பினர்கள் அனைவரும் இது போன்ற உதவிகளை காலத்தின் தேவை கருதி தொடர்ந்து செய்வீர்கள் என நம்புகிறேன்.

**நன்றி**

தட்டான் குளத்தான் பாதம் பணிந்து

.............................................

கலாநிதி சு.பிரபாகர்

ஆலய தற்போதைய பொருளாளர்

## செயலாலரின் செயற்பாட்டு அறிக்கையும் நன்றியும்

மீசாலை வடக்கு தட்டாங்குளம் அருள் மிகு திருநீலகண்ட பிள்ளையாருக்கு 23.08.2024 அன்று பஞ்ச குண்ட பஷ் புணராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடை பெறுகின்றது. என்றால் அது எமது பிரதேச மக்கள் அடியவர்கள் உள்ளூரிலும் வெளியூரிலும் இருந்து கொன்டு செய்த தவப் பயன் என்று தான் கூற வேண்டும்.

03.11.2023 அன்று பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற்று ஒரு வருட காலத்திற்குள்ளேயே சகல திருப்பணிகளும் மக்கள் மனம் கொள்ளக்கூடிய வகையில் முடிவுற்று இன்று 23.08.2024 மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது பெருமானின் திருவருளாகும். அது மட்டுமல்ல திருப்பணிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு அடியவர்கள் மனதிற்குள் புகுந்து அவர்களது சிந்தனைகளை வெளிப்படுத்தி உதவியதும் அற்புதம் தான். எல்லோருக்கும் பெருமானின் திருவருள் கிடைக்கப்பிராத்தித்து நிற்கின்றோம்.

அடியவர்களின் உதவிகளான நிதி ஒரு புறம் மறுபுறம் இத்திருப்பணிகளையும் சிறப்பாகவும் கச்சிதமாகவும் நிறைவேற்றிய பெருமை இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கே உரித்தானது. ஒவ்வொருவராக சொல்லி அழைக்க தேவையில்லை அவர்கள் எல்லோருக்கும் ஆலய பரிபாலன சபை மற்றும் திருப்பணிச் சபையின் சார்பில் சமர்ப்பணம்.

மேலும் இன்னும் ஒரு முக்கிய பொறுப்பு அடியவர்களாகிய எங்களுக்குள் உள்ளது என்னவென்றால் இவற்றை பராமரித்துக் கொள்வது அதற்காக அன்றாடம் வந்து கூட்டி கழுவி துப்பரவு செய்து பேணி பாதுகாக்க வேண்டும்.

இறுதியாக இத்திருப்பணிகளுக்கு உதவிக்கரம் நீட்டிய அன்பர்கள் அனைவருக்கும் விழா சிறப்புற கிரியைகளை செவ்வனே நிறைவேற்றிய பிரதம குருக்கள் மற்றும் அந்தணப் பெருமக்கள் நித்திய பூசகர் அத்தோடு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய ஏனைய அன்பர்கள் அடியவர்கள் மற்றும் எமது ஆலய பரிபாலன சபையினர் திருப்பணி சபையினர் உபயகாரர்கள் ஆகிய அனைவருக்கும் ஆலய பரிபாலன சபையின் சார்பில் எமது உளமார்ந்த நன்றிகள்.

**மு.சிவசுப்பிரமணியம்**
**செயலாளர்**
**ஆலய பரிபாலன சபை**

